தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண் 24347590

**ஆணை நாள்: 05.09.2019 (பிற்பகல்)**

**முன்னிலை**

**திரு ச.செல்வராஜ், எம்.ஏ., பி.எட்.,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••••••

**வழக்கு எண்.SA 9235/E/2018**

திரு சு.அறிவுமணி ... மேல்முறையீட்டாளர்

Vs.

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
கரூர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | 27.06.2018 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 29.08.2018 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 03.12.2018 |

******

**ஆணை**

இன்று (05.09.2019) பிற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மேல்முறையீட்டாளர் திரு சு.அறிவுமணி ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர், திரு P.சந்திரசேகர், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், கரூர் மாவட்டம் ஆஜரானார்.

2. மேல்முறையீட்டாளர் 27.06.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் அ.பு.ச.633/1,2,3,4,5,6,634/B,634/C,634/D ஆகிய சர்வே எண்ணில் உள்ள பூமிகள் தொடர்பாக தங்களிடம் எத்தனை மனுக்கள் கொடுக்கப்பட்டுள்ளன, அந்த மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் நகல், மேற்கண்ட பூமி தொடர்பாக பல மனுக்கள் கொடுத்தும் மேல்முறையீட்டாளரின் மனுவின்மீது முழு நடவடிக்கை எடுக்கப்படாத காரணம், பூமி தொடர்பாக மனுதாரரின் மனுவின் கோரியுள்ள UDRல் ஏற்பட்ட உரிமையாளரின் பெயர் திருத்தம், பரப்பளவு பிழையை திருத்தம் செய்து எத்தனை நாட்களுக்குள் உரிமையாளர்களுக்கு பட்டா வழங்கப்படும் என்ற தகவல் என 7 இனங்களில் தகவலாகக் கோரி பொதுத் தகவல் அலுவலர், நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கரூர் மாவட்டம் என விலாசமிட்டுத் தாக்கல் செய்துள்ளார்.

3. மேல்முறையீட்டாளருக்கு 27.08.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாகப் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்குமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 29.08.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன்கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வருவாய் கோட்டாட்சியர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், கரூர் மாவட்டம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளருக்கு 11.10.2018 தேதியிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. பொது அதிகார அமைப்பினரால் தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலைப் பெற்றுத் தருமாறும் கோரி மேல்முறையீட்டாளர் 03.12.2018 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன்கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (05.09.2019) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் பொது அதிகார அமைப்பின் சார்பாக ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளருக்கு 28.07.2018 மற்றும் 11.10.2018 ஆகிய தேதியிட்ட கடிதங்கள் வாயிலாகத் தகவல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்தார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

5. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், பொதுத் தகவல் அலுவலரால் மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்டுள்ள தகவலைப் பரிசீலனை செய்கையில், மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவல் முழுமையாக வழங்கப்படவில்லையென்பது தெரிய வருகிறது. இது குறித்து இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலரிடம் வினவியபோது, மேல்முறையீட்டாளர் கோரிய தகவலை 15 தினங்களுக்குள் வழங்குவதாக எழுத்துமூலமாக ஆணையத்திற்கு சமர்ப்பித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவுசெய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

**மேல்முறையீட்டாளர் 27.06.2018 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை முறையாக மற்றும் முழுமையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணம் ஏதுமின்றி ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் மேல்முறையீட்டாளருக்கு அனுப்பி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை**

**கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கில் மேலும் விசாரணை தேவையில்லையென ஆணையம் முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.**

**ஒம்/- ச.செல்வராஜ்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப்பதிவாளர்.**

**<u>வழக்கு எண்.SA 9235/E/2018</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் வளாகம்,
கரூர் மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**

திரு சு.அறிவுமணி,
த/பெ. சுப்பிரமணியன்,
எண்.8/138, வேடிச்சிபாளையம்,
நேரூர் தென்பாகம்,
மண்மங்கலம் வட்டம்,
கரூர் மாவட்டம்.

Copy to: Judgement File.
*"VP / PA -06.09.19"*